## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர்களை ஆதரித்து

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திண்டுக்கல் - மதுரையில் வாக்குச் சேகரிப்பு!









கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திண்டுக்கல் மக்களவை தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் ஆர்.சச்சிதானந்தம் அவர்களை ஆதரித்து திண்டுக்கல் கிளாக் டவர் பகுதியில் – "அரிவாள் சுத்தியல் நட்சத்திரம்" சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார்.









கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை மக்களவைத் தொகுதியில் 'இந்தியா' கூட்டணியின் சார்பில் போட்டியிடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றி வேட்பாளர் சு.வெங்கடேசன் அவர்களை ஆதரித்து ஊமச்சிகுளம், மதுரை கோ. புதூர் பகுதியில் வெள்ளமெனத் திரண்ட மக்களிடையே வாக்குச் சேகரித்த காட்சி!

### வேலூர் தொகுதியில் வேட்பாளர் கதிர் ஆனந்தை ஆதரித்து - இன்று

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!

### மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் அறிக்கை!

*வேலூர், மார்ச் 26-*

வேலூர் தொகுதி கழக வேட்பாளர் டி.எம்.கதிர் ஆனந்தை ஆதரித்து இன்று கழகப் பொதுச் செயலாளர் -அமைச்சர் துரைமுருகன் மற்றும் இளைஞர் அணிச் செயலாளர் -அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் தொகுதியில் பிரச்சாரம் செய்கின்றனர்.

இதுகுறித்து வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் வேலூர் நாடாளுமன்றத் தொகுதி திமுக வெற்றி வேட்பாளராக து.மு.கதிர் ஆனந்த் அவர்களை கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்டு கீழ்க்கண்ட அட்டவணைப்படி கழக பொதுச்செயலாளர், நீர்வளம், கனிமவளம், மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் மற்றும் கூட்டணி மற்றும் தோழமைக் கட்சி முன்னணி தலைவர்கள் ஆகியோர் வேலூர் மாவட்டத்தில் பிரச்சாரம் செய்கின்றனர்.

நாள் மற்றும் நேரம்
தொகுதி பிரச்சார நிகழ்விடம்



26.03.2024- மாலை 06.30 மணி -குடியாத்தம்
பேருந்து நிலையம், பேர்ணாம்பட்டு

26.03.2024 - இரவு 07.00 மணி- குடியாத்தம்
பேருந்து நிலையம், குடியாத்தம்

26.03.2024 - இரவு 07.30 மணி - அணைக்கட்டு - பள்ளிகொண்டா

26.03.2024 - இரவு 08.00 மணி - வேலூர் - மண்டித்தெரு, வேலூர்

அதுசமயம் மேற்குறிப்பிட்ட அந்தந்த தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக்கழக நிர்வாகிகள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், இந்தியா கூட்டணி தோழமைக் கட்சிகளான காங்கிரஸ், CPI, CPM, மதிமுக, விசிக, முஸ்லீம் லீக், மக்கள் நீதி மையம், மனிதநேய மக்கள் கட்சி, மனித நேய ஜனநாயக கட்சி, தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, சமத்துவ மக்கள் கட்சி, திராவிடர் கழகம், கொ.ம.தே.க, திராவிட முஸ்லீம் முன்னேற்ற கழகம் உள்ளிட்ட நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைமைக்கழக சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள், வட்ட, வார்டு, ஊராட்சி உட்கிளை நிர்வாகிகள், மாவட்ட ஊராட்சி, மாநகராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், உறுப்பினர்கள், கழக முன்னாள், இந்நாள் முன்னோடிகள், ஆகியோர் கலந்து கொண்டு இந்தியா கூட்டணி தி.மு.க. வெற்றி வேட்பாளர் து.மு. கதிர்ஆனந்த் வெற்றிவாகை சூடிடும் வகையில் அனைவரும் பிரச்சார கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு வேலூர் மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்டபேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தனது அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம்!



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு:

| தேதி | | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|---|
| 29.03.2024 (வெள்ளிக்கிழமை) | - | ஈரோடு |
| 30.03.2024 (சனிக்கிழமை) | - | சேலம் |
| 02.04.2024 (செவ்வாய்க் கிழமை) | - | திருச்சி |
| 03.04.2024 (புதன் கிழமை) | - | சிதம்பரம் |
| 06.04.2024 (சனிக் கிழமை) | - | சென்னை, திருபெரும்புதூர் |
| 07.04.2024 (ஞாயிற்றுக்கிழமை) | - | சென்னை |
| 10.04.2024 (புதன் கிழமை) | - | மதுரை |
| 11.04.2024 (வியாழக் கிழமை) | - | தூத்துக்குடி |
| 14.04.2024 (ஞாயிற்றுக் கிழமை) | - | திருப்பூர் |
| 15.04.2024 (திங்கட் கிழமை) | - | கோவை |
| 16.04.2024 (செவ்வாய்க் கிழமை) | - | பொள்ளாச்சி |

### தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும்

## கனிமொழி கருணாநிதி இன்று வேட்புமனுத் தாக்கல்!

### திரளாகப் பங்கேற்குமாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!

*தூத்துக்குடி, மார்ச் 26-*

'இந்தியா' கூட்டணி சார்பில் தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் இன்று (26.03.2024) செவ்வாய்க்கிழமை வேட்புமனுத் தாக்கல் செய்கிறார். அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் திருமதி.பி.கீதாஜீவன் அறிக்கை ஒன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-



நடைபெற இருக்கின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணி சார்பில் தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் தி.மு.க வேட்பாளராக கனிமொழி கருணாநிதி அவர்கள் தி.மு.கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளார்.

தி.மு.க. வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள கனிமொழி கருணாநிதி அவர்கள் இன்று (26.03.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணி அளவில் தூத்துக்குடி கலைஞர் அரங்கம் முன்பு உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை முன்பிருந்து புறப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேட்புமனுத்தாக்கல் செய்ய இருக்கிறார்.

வேட்பு மனுத்தாக்கல் நிகழ்ச்சியில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள், பொது மக்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று பெருந்திரளாகக் கலந்து கொள்ள அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சிவகங்கையில் நடைபெற்ற 'இந்தியா' கூட்டணி செயல்வீரர்கள் கூட்டத்தில் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார். உடன் வேட்பாளர் கார்த்தி ப.சிதம்பரம், முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி., அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன், எம்.எல்.ஏ.க்கள், திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.